RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s119

OPEN ACCESS

# பாஞ்சாலி சபதம்: யாப்பியல் நெறியும் செய்யுள் வனப்புகளும்

**சு. விக்னேசு** [அ, *]

[அ] தமிழ்த்துறை, தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க் கல்லூரி, பேரூர், கோயம்புத்தூர்-641010, தமிழ்நாடு, இந்தியா

# Panjali Sabatham: Prosodic Features and Poetic Style

**S. Vignesh** [a, *]

[a] Department of Tamil, Thavathiru Santhalinga Adigalar Arts, Science and Tamil College, Coimbatore-641010, Tamil Nadu, India

* Corresponding Author: vickytamil152@gmail.com

Received: 30-08-2021
Revised: 20-07-2022
Accepted: 27-07-2022
Published: 09-09-2022

Check for updates

## ABSTRACT

Bharathiyar was the one who created Tamil so that the honey-like Tamil music could spread all over the world. He made many innovations with his songs to remove the distance between people and Tamil poetry. He composed poems following tradition in traditional forms like song and poetry. He introduced innovation into traditional forms of poetry and gave rise to modern poetry. Panjali Sabadham is a unique record among Bharathiyar's songs. This book is full of simple Tamil, subtlety and emotions. The Panjali Sabatham consists of two parts. This book contains four hundred and twelve songs in five chapters namely Sulchicharukam (Duryodhana's trickery Chapter), Chuthattacharukam (Gambling Chapter), Adimaicharukam (Slavery Chapter), Thukilurithal charukam (Draupadi in the assembly Chapter), and Sapadhacharukam (Imprecation Chapter). Bharathiyar's poems have all been explored from a prosodical perspective. However, the Panjali Sabatham is not known to have been explored with specific focus on prosodic features. Therefore, the article researches Panjali Sabadham based on previous studies explaining the prosodic features and the verse Style based on Tolkaapiyam construction under the title “Panchali Sabatham: Prosodic features and Verse Style.” This book is made up of poetry that are Sindhu (slightly shorter than average), Kattalai Kalippa, Nilai Mandila Aasiriyum, Arusir (a four-bar song consisting of six words), Ezhusir (seven words and four bars), and Ensir Vridham (a four-bar song consisting of eight words). Among them the references made in previous studies are also reviewed. The way poetic style of the characters of Ammai (not based on the original word), Thonmai (prose is mixed with ancient subject matter), Thol (finer terms), Virunthu (Novel, Modern Poetry), Iyaibu (the consonants from 'jna' to 'na' as the last syllable), Pulan (understand the meaning without examining), and Izhaibu (adverbial verbs from related words), added strongly as the poet is highlighted. Although Tolkappiyam has mentioned 34 elements, considering the theme of Panchali Sabatham, considering the incompatibility of elements such as munnam (Intention), kaikol (Virtuous life), thinai (Location), porul vahai (Theme), etc., only numerical patterns which are considered as internal patterns are taken as the data for the study.

**Keywords:** Panjali Sabatham, Tamil poetry, Bharathiyar, Poetic Style

## முன்னுரை

பாரதியார் கவிதைகளில் பாவகை, யாப்பு குறித்த ஆய்வுகளில் செங்கமலத் தாயாரின் ‘பாரதி யாப்பு’ எனும் ஆய்வியல் நிறைஞர் பட்ட (1983) ஆய்வு குறிப்பிடத் தக்கது. தஞ்சைப் பல்கலைக்கழகம்

வெளியிட்ட பாரதி பாடல்கள் - ஆய்வுப் பதிப்பு (1987) பாரதியார் கவிதைகளை யாப்பு அடிப்படையில் பாகுபடுத்தியுள்ளது. 'தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும்' எனும் பேராய்வுத் திட்டத்தில் (1989) சோ.ந. கந்தசாமி அவர்கள் பாரதி யாப்பியலை ஆய்ந்துள்ளார். 'பாரதியார் கவிதைகளில் யாப்பியல்' எனும் தலைப்பில் எழுதியுள்ள கட்டுரை (2021), இதுவரை பாரதி யாப்பியலில் நடைபெற்ற ஆய்வுகளில் உள்ள குறைகளைச் சுட்டி மதிப்பிடுவதாக அமைந்துள்ளது. இவ்வாய்வுகளில் பாரதியார் கவிதைகளில் உள்ள யாப்பியல் ஆயப்பெற்றுள்ளது (Sathish, 2021).

சுப்பிரமணிய பாரதியார் தமிழ் மரபுக் கவிதைகளில் வேர்கண்டவர். புதுக்கவிதைக்குத் தளிரானவர். இசைத்தமிழ் வடிவமான சிந்துப்பாக்களை மிகுதியாகக் கொண்டு பாஞ்சாலி சபதம் என்ற நூலை இயற்றியவர். புதுமை அடிப்படையில் செய்யப்பட்ட நூல் எனினும் மரபு இலக்கணங்களும் அமைந்துள்ளன. பாஞ்சாலி சபத யாப்பியல் நெறியும், தொல்காப்பியச் செய்யுள் வனப்புகள் இந்நூலில் பொருந்துவதும் இக்கட்டுரையில் விளக்கப்படுகிறது (Gowmareeswar, 2011). இதன் முடிபிற்கு அமைப்பியல் ஆய்வுமுறையும் விளக்கவியல் அணுகுமுறையும் கருவிகளாக அமைகின்றன. கட்டுரைத் தரவுகளுக்கு தஞ்சைப் பல்கலைக்கழக ஆய்வுப் பதிப்பினை அடிப்படையாகக் கொண்டு, பா அமைப்பும், எண்ணிக்கையும் குறிக்கப்பட்டுள்ளன. பின்னர் பாவகை குறித்த மாறுபட்ட கருத்துகள் முந்தைய ஆய்வுகள் வழி ஒருங்குவைத்து நோக்கி முடிபுகள் தரப்பட்டுள்ளன.

## பாஞ்சாலி சபதம்: பா அமைப்பு

பாஞ்சாலி சபதம் 413 பாக்களால் அமைக்கப்பட்டுள்ளது. இந்நூல் சிந்துப்பா, கண்ணிகள், என்ற பிற்காலப் பாவடிவங்களையும் நிலைமண்டில ஆசிரியம், ஆசிரிய விருத்தம், கட்டளைக் கலிப்பா ஆகிய மரபுப் பாவடிவங்களையும் கொண்டு பாடப்பட்டுள்ளது. இப்பாக்களின் எண்ணிக்கை (தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புப்படி) பின்வருமாறு அமைந்துள்ளது.

- சிந்துப்பா - 221
- கண்ணிகள் - 107
- கட்டளைக் கலிப்பா - 49
- ஆசிரிய விருத்தம் - 35
- நிலைமண்டில ஆசிரியம் - 1

இப்பாவகைகளைப் பாரதி கையாண்டுள்ள முறையைக் காண்போம்.

## சிந்துப்பா

இரண்டடிகளால் அளவொத்து அமைவது சிந்து என்னும் பாவகை ஆகும். வடமொழிக் குறியீடாகிய 'திரிபாதி' என்பதைப் புத்தமித்திரனார் 'சிந்து' எனக் குறிப்பதையும் இரண்டடி ஒத்து அழிசீர் இல்லாதது சிந்து எனவும் இரா. திருமுருகன் குறிப்பிடுகிறார். இத்தகைய சிந்துப்பா பாரதியால் 10 வகையாகக் கையாளப்பட்டுள்ளது

- நொண்டிச் சிந்து - 36
- ஈரடிச் சிந்து (11 சீர்) - 08
- ஈரடிச் சிந்து (5 சீர்) - 09
- நாலடிச் சிந்து (18 சீர்) - 03
- நாலடிச் சிந்து (12 சீர்) - 01
- நாலடிச் சிந்து (8 சீர்) - 96
- நாலடிச் சிந்து (7 சீர்) - 14
- நாலடிச் சிந்து (6 சீர்) - 39
- நாலடிச் சிந்து (5 சீர்) - 07
- சிந்து - 08

இவ்வகைமையே அன்றி, தனிச்சொல்லுக்கு முன்னும் பின்னும் உள்ள சீர்கள் சமமாய் அமைவது சமநிலைச் சிந்து என்றும், மிகுந்தும் குறைந்தும் இருப்பது வியனிலைச் சிந்து என்றும் கூறப்படும் (Rajagopalachari, 2000). இவ்வகையில் ஐந்துசீர், பதினொருசீர், ஒன்பதுசீர் என அமைந்த சிந்துப்பாக்களை 'சமநிலைச்சிந்து' எனவும், மற்றையவற்றை 'வியனிலைச்சிந்து' எனவும் கொள்ளலாம். இதேபோல மிகுதியாகத் தனிச்சொல் பெற்று வரும் சிந்துக்களை வளையல் சிந்து என்பர். இக்கூற்றுப்படி 53-83, 86-91,136-142,153, இரண்டாம் பாகத்தின் 25-40, 109-126,173 ஆகிய பாடல்களை வளையல் சிந்துக்களாகக் குறிப்பிடலாம்.

## மாற்றுநோக்கு

சிந்துப்பாவிற்கெனத் தனித்த இலக்கணம் தோன்றிய போதும், பாரதி பாடியுள்ள சிந்துக்கள் வடிவம், தளை, சீர், எதுகை ஆகியவற்றில் ஆசிரிய விருத்த வடிவத்தை ஒத்து அமைந்துள்ளது. இத்துணிபிற்கு "பண்ணொடு இசைத்துப் பாடுதற்கேற்ற சிந்துப்பாடல்கள் பலவற்றை யாப்பியல் வகையில் ஆசிரிய விருத்தங்களாகக் கொள்ளுமாறு அமைதலும் உண்டு" என்ற கருத்தும் துணைசெய்கிறது (Vishwanathan, 2000). மேற்சொன்ன வடிவுக்கு இரண்டடியில் அமைந்த சிந்துக்களும் (42-49, இரண்டாம் பாகம் 174-182), நாலடியில் ஐந்துசீர் கொண்டு பாடப்பட்ட சிந்துக்களும் (இரண்டாம் பாகம் 41-47) பொருந்தாதவை. மற்ற சிந்துக்களை அறுசீர், எழுசீர், எண்சீர், பதினோருசீர், பன்னிரு சீர், பதினெண் சீர் ஆசிரிய விருத்தங்களாகக் கொள்ள இடமுண்டு. இவற்றுள் சந்த நயம் கொண்ட பாக்களும் அமைந்துள்ளதைக் காணமுடிகிறது. சான்றாகப் பாஞ்சாலி சபதத்தின் முதற்பாகத்தில் பாடப்பட்ட 183-195 ஆகிய சிந்துக்களையும் இரண்டாம் பாகத்தில் அமைந்த 4-8, 14, 17, 20-24 ஆகிய பாக்களையும் காட்டலாம். இப்பாக்கள் விருத்தப்பாவியல் கூறும் எழுசீர்ச்சந்த விருத்தத்தோடு பொருந்துகிறது. ஆறு தேமாச்சீர்களும் இறுதியில் விளச்சீரும் பெற்று அமைவது 'சுகந்தி' என்னும் சந்தவிருத்தமாகும் (Veerappa Muthaliyar, 1984). மேலே குறிப்பிட்ட பாக்கள் இவ்விலக்கணத்தோடு பொருந்தி வந்தாலும் இறுதிசீர் மாச்சீராக அமைந்துள்ளது. எனினும் சந்தம் குறையாமல் அமைந்துள்ளமை நோக்கத்தக்கது.

## கண்ணிகள்

ஈரடியில் ஓரெதுகை கொண்டு அமைவது கண்ணி எனும் வடிவமாகும். பாரதி பாடிய கண்ணிகள் 107 (இரண்டாம் பாகம் 48-108,127-172). இவற்றுள் வெண்டளைகளும் கலித்தளையும் மிகுதியாகப் பயின்றுவந்துள்ளன. ஓரிரு ஆசிரியத்தளைகளும் இடம்பெற்றுள்ளன. கண்ணி எனும் வடிவத்திற்கு சிந்துப்பாவியல் காட்டும் சான்றுகளை நோக்கும் போது, பாரதி பாடியுள்ள இரண்டடிச் சிந்துக்களையும் (42-49, இரண்டாம் பாகம் 174-182) கண்ணி எனக்கொள்ள இடமுண்டு. மேலே குறிப்பிட்ட 107 கண்ணிகளையும் வெண்கலிப்பாவின் ஒரு வகையாகும் எனக் சோ.ந. கந்தசாமி குறிப்பிடுகிறார் (Kandasamy, 1989). இக்கண்ணிகளை, 'வெண்டளையால் ஆன நீண்ட பாடல்கள் இருப்பினும் அவை அனைத்தும் வெண்பாவுக்குரிய சிந்தடியால் முடியவில்லை. எனவே அவை வெண்டளைக் கண்ணிகளில் அடக்கப்பட்டன' என்கிறார். ஆனால் கண்ணிகள் என்னும் வடிவத்திற்கும் மேற்சொன்ன பாவிற்கும் தொடர்பு இல்லை. இரண்டு அடியில் பொருள் முடிவு பெறாமல் தொடர்ச்சியாக அமைவதே இக்கருத்து எழக் காரணமாகும். மேலும், பாரதி பாடியுள்ள கண்ணிகளாகப் தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்பு குறிப்பிடும் பாக்கள், பாஞ்சாலி சபதத்தில் கண்ணிகள் எனச் சுட்டும் இப்பாக்களுடன் பொருந்தவில்லை. பல்கலைக்கழகப் பதிப்பாசிரியர், சோ.ந. கந்தசாமி ஆகியோர், மேற்சொன்ன பாக்களைக் கலிவெண்பா அல்லது வெண்கலிப்பா எனச் சுட்டுவதற்கு இப்பாவில் அமைந்த வெண்டளையும், கலித்தளையும் காரணம் எனலாம். இரா. திருமுருகன் வெண்டளைக் கண்ணிகள் என்பதற்கு ஈரடியில் அமைந்த ஒரெதுகை காரணமாக அமைகிறது.

பாஞ்சாலி சபதத்தின் இரண்டாம் பாகத்தில் 48 முதல் 108 வரையிலும், 127 முதல் 172 முடியவும் கண்ணிகள் எனக் கூறப்பட்ட பாக்கள், பாரதி பாடியுள்ள 'புதிய கோணங்கி', 'ஜாதிய கீதம்','சாதாரண வருசத்துத் தூமகேது', 'கண்ணன் என் சீடன்' ஆகிய பாக்களின் நிலைமண்டில ஆசிரியப்பா

வடிவத்தோடு பொருந்துகிறது. எனினும் கண்ணன் என் சேவகன் என்ற தலைப்பில் உள்ள பாடலோடு இப்பாக்கள் சரியாகப் பொருந்துகின்றன. ஆனால் இப்பாடலை பல்கலைக் கழகப் பதிப்பு குறள்வெண் செந்துறை எனக் குறிப்பதும் இங்கு சுட்டத்தக்கது (Vishwanathan, 2000).

இதுகாறும் பெறப்பட்ட விளக்கங்கள் வழி கண்ணிகளாகக் குறிக்கப்படும் பாடல்களை, இரண்டு அடிகளாகப் பிரித்துப் பதிப்பித்துள்ளமையை நோக்கும்போதும், தளை அமைவை நோக்கும் போதும், 'குறள்வெண் செந்துறை' எனவும், பொருளின் தொடர்ச்சியையும், வடிவத்தையும் நோக்கின் 'நிலைமண்டில ஆசிரியம்' எனவும் கொள்ளுதல் தகும்.

## நிலைமண்டில ஆசிரியம்

அந்திமாலை வருணனையாக அமைந்துள்ள 152வது பாடல் நிலைமண்டில ஆசிரிய யாப்பில் பாடப்பட்டுள்ளது. இதில் ஆசிரியத் தளைகள் மிகுதியாகப் பயின்று வந்துள்ளன. கலி மற்றும் வெள்ளைத் தளைகளும் பயின்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கட்டளைக் கலிப்பா

இது எழுத்தெண்ணிப் பாடப்படும் பாவகை ஆகும். அடிதோறும் எட்டு சீர்களைக் கொண்டும், நேரசையில் தொடங்கின் அரையடிக்குப் 11 எழுத்துக்களும், நிரையசைக்குப் 12 எழுத்துக்களும் கொண்டு யாக்கப்படுவது கட்டளைக் கலிப்பா ஆகும் (Rajagopalachari, 2000). பாஞ்சாலி சபதத்தில் 49 கட்டளைக் கலிப்பாக்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் ஆசிரியத் தளைகள் பெரும்பான்மையாக அமைந்துள்ளன. காய்ச்சீர்கள் அருகி இடம்பெற்றுள்ளன. பாரதி பாடிய கட்டளைப் பாக்கள் அரையடியில் நேரசைக்குப் 10 எழுத்துக்களும், நிரையசைக்குப் 11 எழுத்துக்களும் கொண்டு பாடப்பட்டுள்ளன. மேற்காட்டிய பாடல்களில் 98, 99, 100, 119, 123, 182, 185, 198, 203, 204 ஆகிய பாடல்கள் நிரையசையில் தொடங்குகின்றன. ஏனைய பாக்கள் நேரசையில் தொடங்கப்பட்டுள்ளன. இப்பாக்களில் அமைந்த வாய்ப்பாடுகளை,

- மா மா விளம் மா மா மா விளம் மா
- விளம் மா விளம் மா விளம் மா விளம் மா

என இருவகைகளில் அடக்கலாம். இவ்வாய்பாடுகளில் இடையில் வரும் மா, விளச் சீர்கள் தம்முள் மாறியும் காய்ச்சீர்களாகவும் விரவியுள்ளன. எனினும் எழுத்தெண்ணிக்கை மாறுபாடில்லாமல் அமைந்தமை மனங்கொள்ளத்தக்கது. தஞ்சைப் பல்கலைக்கழகப் பதிப்பில் எண்சீர் விருத்தமாகக் காட்டப்படும் 207வது பாடலும் கட்டளைக் கலிப்பாவே ஆகும். இப்பா நிரையசையில் தொடங்கி, அரையடிக்குப் 11 எழுத்துகள் கொண்டு பாடப்பட்டுள்ளது. எனவே பாஞ்சாலி சபதத்தில் அமைந்த கட்டளைக் கலிப்பாக்கள் 50 என்பது தெளிவாகிறது.

இக்கட்டளைப் பாக்களை பாரதியார் எண்சீர் விருத்தம் எனக் குறிப்பிடுகிறார் (Vishwanathan, 2020). இடைக்காலத்தில் எழுந்த இலக்கியங்களில் கட்டளைக் கலிப்பா எனும் பாவகைகள் கையாளப்பட்டு இருப்பினும், இப்பாவிற்கு விதி நூற்பாக்கள் எழுதப்படவில்லை என்ற கருத்து பாரதி அங்ஙனம் குறித்ததற்குக் காரணமாக அமைகிறது. ஆயினும் ஆசிரிய விருத்தங்களைப் போலவே இனிய அகவலோசை பெற்றுவருவதும் இங்கு நோக்கத்தக்கது (Kandasamy, 1989).

## ஆசிரிய விருத்தம்

பாஞ்சாலி சபதம் அறுசீர், எழுசீர், எண்சீர் ஆகிய மூன்று வகை ஆசிரிய விருத்தப்பாக்களையும் கொண்டுள்ளது. அறுசீர் விருத்தங்களில் ஆறு பாக்கள் அமைந்துள்ளன. அவை

- காய் காய் காய் காய் மா மா (முதல்பாகம் 154, இரண்டாம் பாகம் 2)
- விளம் மா மா விளம் மா மா (இரண்டாம் பாகம் 189-192)

என இரு வாய்பாடுகளில் பாடப்பட்டுள்ளன. முதல்வகையில் அமைந்த பாக்கள் பிற சீர்களின் மயக்கம் இன்றி வாய்பாட்டுக்குள் ஒழுகி அமைந்துள்ளன. இரண்டாம் வகையில், மூன்று, நான்கு, ஐந்தாம் சீர்களாக அமைந்த மா, விளச் சீர்கள் தம்முள் மாறியும் காய்ச்சீர்கள் கலந்தும் வந்துள்ளன. இவ்விரு வகை ஆசிரிய விருத்தங்களும் விருத்தப்பாவியலில் சந்தமற்ற வகைகளாகக் கூறப்பட்டுள்ளன (Veerappa Muthaliyar, 1984).

எழுசீர் விருத்தத்தில் ஒரு பா மட்டும் பாஞ்சாலி சபத இரண்டாம் பாகத்தில் (1) கடவுள் வாழ்த்தாக அமைந்துள்ளது. இது

- விளம் மா விளம் மா விளம் விளம் மா

என்ற வாய்பாட்டில் பிறழாமல் அமைந்துள்ளது. இவ்வகையும் வீரப்பமுதலியாரால் சந்தமற்ற விருத்தமாகக் குறிக்கப்பட்டுள்ளது.

28 எண்சீர் ஆசிரிய விருத்தங்கள் பாடப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு பா கட்டளைக் கலிப்பாவாக அமைந்ததை மேலே கண்டோம். எனவே 27 எண்சீர் விருத்தங்கள் என்பது சரியான முடிபாகும். இப்பாடல்கள்,

- காய் காய் மா மா காய் காய் மா மா
- விளம் விளம் விளம் விளம் விளம் விளம் விளம் விளம்

என்ற இரு வகையில் பாடப்பட்டுள்ளன. முதல் வாய்பாட்டில் 115-118, 143-157, இரண்டாம் பாகத்தின் 9-13,183-188 ஆகிய பாடல்கள் சீர்பிறழாது அமைந்துள்ளன. இவை காய்ச்சீர்களை மிகுதியாகப் பெற்றமையால் துள்ளலோசை கலந்து அமைந்துள்ளது. இவ்வகை விருத்தப்பாவியலில் இடம்பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது. 155,156,157 ஆகிய பாடல்கள் இரண்டாவது வகையில் அமைந்து விளச்சீருக்குப் பதில் காய்ச்சீரும் மாச்சீரும் கலந்து வரப்பெற்றுள்ளன.

## யாப்புப் புதுமைகள்

பாரதியார் கையாண்ட சிந்துப்பாக்கள் தனிச்சொல்லை ஒரு சீராகக் கொண்டு அலகிடும் போது ஆசிரிய விருத்தங்களாகத் தோன்றுகின்றன. சிந்துப்பாவிற்கான இலக்கணம் பின்னாளில் தோன்றியது எனினும் அதற்குள் பாஞ்சாலி சபதத்தில் அமைந்த ஓரிரு சிந்து வகைகளே அடங்கும். பிற சிந்துக்களுக்கு விரிவான விதிகள் இல்லை. எட்டு சீர்கள் கொண்ட ஒரு பாவகையை இருவிதமாகக் கையாண்டுள்ள திறம் புதுமையானது.

## பல்வகைப் பாக்கள் அமையும் காரணம்

பாஞ்சாலி சபதம் தனித்த காவியம் எனக் குறிப்பிடும் பாரதியார் ஒரு பாவகையைக் கொண்டு இயற்றாமல் பல்வகைப் பாக்களையும் அவற்றிலும் பல வாய்பாடுகளையும் கையாண்டிருக்கிறார். கட்டளைக் கலிப்பா எனும் வகை முதலில் கவிக்கூற்றாக அமைந்து, பின்னர் கதையோடு ஒன்றிக், கதைமாந்தர் கூற்றாகவும் பாடப்பட்டுள்ளது. சிந்துப்பாக்களிலும் இரண்டடிச் சிந்து, நொண்டிச் சிந்து, வளையல் சிந்து, நான்கடிச்சிந்து எனவும், அவற்றுள் 5, 6, 7, 8, 9, 11, 12, 18 என்ற எண்ணிக்கையில் சீர்கள் மிகுந்தும் குறைந்தும் அமைக்கப்பட்டுள்ளன. விருத்தப் பாடல்கள் நாட்டுவளம் பாடவும், கடவுள் வாழ்த்தாகவும், உரையாடல்களாகவும் அமைந்துள்ளன. இவ்வாறு பாரதி பல பாவகைகளைக் கையாளுவதை எண்ணும் பொழுது, "ஒரு பொருள் கவிஞரின் அனுபவத்திற்கு ஏற்ப உணர்ச்சியை நல்குகிறது என்றும், அவ்வுணர்ச்சி வேறுபாட்டிற்குப் பொருந்தும் வண்ணம் அவர்கள் பாடல் வடிவம் உருவாகிறது என்றும் தெளிவாகின்றன" என்ற கருத்து மெய்யாகிறது (Gnanamoorthy, 2002).

எனவே ஒரு காவியத்தில் பல பாவடிவங்கள் இடம்பெறுவதற்குக் கவிஞரின் உணர்வே காரணமாகிறது என்பதும், பாரதியின் கைவண்ணமும் இவ்வாறு அமைந்ததே என்பதும் தெளிவாகிறது.

## செய்யுள் வனப்புகள்

காப்பிய மரபுகளில் இருந்து புதுமையாகப் படைக்கப்பட்ட பாஞ்சாலி சபதம் தொல்காப்பியச் செய்யுள் வனப்புகளைப் பெற்றுள்ளதா? என்று தேட, இவ்வனப்புகளில் சில தனிச்செய்யுள்களில் காணக் கூடியனவாகவும் சில காப்பியங்களில் பொருத்திக் காணத்தக்கனவாகவும் உள்ளன என்ற கருத்து துணைசெய்கிறது (Thamizhannal, 2003). இதனை அடியொட்டி நோக்குங்கால் தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன் எனும் ஐந்து வனப்புகள் பொருந்துகின்றன. அடிநிமிர்வு இன்றி என்றதனால் அம்மையும், செய்யுள் ஈட்டச் சொற்களில் அமைய வேண்டும் என்றதனால் அழகும், வல்லொற்று வராமல் அமைவது என்பதனால் இழைபு என்னும் வனப்பும் பொருந்தவாயின.

## தொன்மை

பழைமையாகிய பொருள்மீது உரை கலந்து பாடப்பெறும் வனப்பு தொன்மை எனப்படும். இதற்கு உரைவரைந்த இளம்பூரணர், “இராமசரிதமும், பாண்டவர் சரிதமும் முதலாயினவற்றின் மேல்வரும் செய்யுள்” எனக் குறிப்பிடுகிறார். (நூற்பா-229) ஆகையால் பாரதக் கதையின் ஒரு பகுதியாக வரும் பாஞ்சாலி சபதம் தொன்மை எனும் வனப்புக்குத் தக்க சான்றாகும். இந்தத் தொன்மை என்பதைப் புராண மரபுகள் எனக் கொள்ளும் தமிழண்ணல், உலகியல் வழக்கினைப் பாடும் மரபினால், “தொன்மம் எனப்படும் புராண மரபுகள் அருகிவிட்டனவோ என்று எண்ண இடமேற்படுகிறது” எனக் குறிப்பிடுகிறார். இக்கருத்துக்கு ஆறுதலாய் பாஞ்சாலி சபதத்தைப் பார்க்க முடிகிறது.

## தோல்

ஓசை மிகுந்த சொற்களால் உயர்ந்த பொருளை அடிநிலை கருதாது அமைத்துப் பாடுவது தோல் என்னும் வனப்பாகும். (நூற்பா-230) பாரதியார் இந்நூலில் கையாண்டுள்ள சிந்துக்களில் அமைந்துள்ள இனிய ஓசையும் பெண்மையின் உயர்வைக் காட்டும் பொருண்மையும் இவ்வனப்பிற்குப் பொருந்துகிறது.

## விருந்து

“விருந்தாவது முன்புள்ளோர் சொன்ன நெறிபோய்ப் புதிதாய்ச் சொன்ன யாப்பின் மேலது என்றவாறு” என்பார் இளம்பூரணர். (நூற்பா-231) ஐந்து வேறுபட்ட யாப்பாலும், சிந்துக்களில் பல புதுமைகள் செய்தும், கட்டளைக் கலிப்பாவின் எழுத்தெண்ணிக்கையுள் மாற்றங்களைக் கொடுத்தும் பாரதியார் பாடிய இக்காவியம் விருந்து எனும் வனப்பிற்கு ஏற்றதாகும்.

## இயைபு

பாடலின் இறுதி எழுத்து ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள என்னும் பதினொரு மெய்யெழுத்துக்கள் கொண்டு முடிவது இயைபு எனும் வனப்பு. (நூற்பா-232) ஞ, ந, வ, ழ, என்ற நான்கு மெய்கள் நீங்கலாக மற்ற எல்லா மெய்களாலும் பாஞ்சாலி சபதப் பாக்கள் முடியப்பெற்றுள்ளன. சான்றாக 1, 3, 7, 10, 15, 39, 88 ஆகிய பாடல்கள் முறையே ய, ள, ம, ர, ன, ல, ண என்ற மெய்களில் முடிவதைக் காட்டலாம்.

## புலன்

வழக்குச் சொற்களால் பாடப்படுவதும் படிப்போர்க்கு உரையின்றிப் பொருள் தருவதுமான இலக்கியங்கள் புலன் என்னும் வனப்பிற்குப் பொருந்துவன. (நூற்பா-232) இவ்விதம் ஆராயின் பாஞ்சாலி சபதம் முழுமையும் புலன் என்னும் வனப்பில் அமைந்ததே ஆகும்.

## முடிவுரை

பாஞ்சாலி சபதம் ஐந்து வேறுபட்ட யாப்பில் அமைக்கப்பட்டுள்ளது என்பதும், செய்யுள் வனப்புகள் எட்டனுள் தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன் ஆகிய ஐந்தையும் பெற்றுள்ளது என்பதும் இக்கட்டுரையில் விளக்கப்பட்டது. பாரதியார் கவிதைகள் முழுவதும் யாப்பியல் நோக்கில் ஆராயப் பெற்றும் பதிப்புகள் பலவற்றில் யாப்பு மாறிமாறிக் குறிக்கப்படுகிறது. பாஞ்சாலி சபத யாப்பும் பல்வேறு கருத்துக்களுக்கு இடமளிக்கிறது. எனவே பாஞ்சாலி சபதப் பதிப்புகளையும், பாரதி யாப்பியலின் முன் ஆய்வுகளையும் கொண்டு இந்நூலின் யாப்பு இன்னதென முடித்துக் கூற விரிவான ஆய்வு தேவைப்படுகிறது.

## References

Gnanamoorthy, T.A., (2002) Ilakiya Thiranaivu, Yazhi Veeliyeedu, Chennai, India

Gowmareeswar, Si., (2011) Tholkappiyam Porulathikaram, Saradha Pathippagam, Chennai, India.

Kandasamy, S, K., (1989) Tamil Yappu Ilakkanam Thotramum Valarchiyum Tamil University, Thanjavur, India.

Rajagopalachari, K., (2000) Ilakkana Vilakkam-5, Kannan Pathippagam, Chennai, India.

Sathish, A., (2021). Pāratiyār Kavitaikaḷil Yāppiyal [Yapiyal in Bharatiyar poems], Muallim Journal of Social Sciences and Humanities, 5(3), 47-56. https://doi.org/10.33306/mjssh/137

Thamizhannal, (2003) Sanga Ilakkiya Oppidu, Meenakshi Puthaka Nilayam, Madurai, India.

Veerappa Muthaliyar, T., (1984) Viruttappaviyal, Kazhaga Veeliyeedu, Chennai, India.

Vishwanathan, S., (2000) Bharathi Padalkal, Tamil University, Thanjavur, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License